கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(29.03.2015 - 29 பங்குனி, 2015 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 05, கதிர் - 109 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 37 / NEWS / 2014

# ஞான ஒளி

ඥාන ඔලි

GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05



# உயிர்த்த இயேசுவில் விசுவாசம் கொள்வதே நம் வாழ்வின் ஆதாரம்




## அல்லேலூயா....அல்லேலூயா....

அதிகாலையில் இயேசு உயிர்த்தெழுந்தார்
அனைவருக்கும் அருங்காட்சி தந்தார்
நல் மாட்சிமை விளங்கும் சுபதினமே
தூய மரகதப் பொன்மணி அவர் முகமே
மரித்த மூன்றாம் நாளிலிலே
அவர் மகிமை பெற்றிடும் அற்புதமே.
தடைகளை உடைத்து வெற்றி கண்டார்
இத் தரணியை மீட்டுப்
புது வாழ்வு தந்தார் – பாவத்தின்
தீமையைப் புதைத்திடுவோம்
நம் பகைவரை நேசித்து மகிழ்ந்திடுவோம்
சாபத்தின் கொடுமையை தகர்த்திடுவோம்
நாம் சத்திய பாதையின் வழி நடப்போம்

துயரங்கள் துன்பங்கள் தொடர் முடியும்
தூய்மை துணிவும் நம்பிக்கை
தினம் விடியும்
பூபாள இராகம் இசை முழங்கும்
புதிய வானம் புதிய பூமி இனி பிறக்கும்

அல்லேலூயா ...

அல்லேலூயா ...

அல்லேலூயா ...

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் உயிர்ப்பு விழாச் செய்தி - 2015

திருவழிபாட்டு வருடத்தின் மாபெரும் திருவிழாவான உயிர்ப்பு விழாவில் மரணத்தையும், பாவத்தையும் வென்ற நம் ஆண்டவரும் மீட்பருமான நசரேத்தூர் இயேசுவின் வெற்றியைக் கொண்டாடி மகிழ்கின்றோம்.

வானதூதர்களின் செய்தி எம் காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலிப்பதாக "உயிர் வாழ்பவரை ஏன் இறந்தவர்கள் நடுவில் தேடுகிறீர்கள்? அவர் இங்கு இல்லை. ஆனால் அவர் உயிர்த்து விட்டார் (லூக் 24:5). புனித அகுஸ்தினார் இயேசுவின் உயிர்ப்பை பற்றி இவ்வாறு கூறுகிறார். நாம் உயிர்ப்பின் மக்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். இயேசு இறக்கவில்லை. உயிர்த்துவிட்டார். அவர் உடலோடும் ஆன்மாவோம் உயிர்த்தெழுந்தார். இதையே நாம் நம்புகிறோம். இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவ வாழ்வின் முக்கிய நிகழ்வாக திகழ்கின்றது. இதனால்தான் நாம் இயேசுவின் உயிர்ப்பு விழாவைக் கொண்டாடுகின்றோம்.

ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டவரோடு உலக திருச்சபையிலுள்ள நாம் அனைவரும் கொள்ள வேண்டிய ஒற்றுமையின் மகிழ்ச்சியை கிறிஸ்துவில் விசுவசிப்போர் என்ற ரீதியில் நாம் கொண்டிருக்க வேண்டும் என திருத்தந்தை வலியுறுத்துவதை நாம் மறவாதிருப்போம். கிறிஸ்துவில் எமது விசுவாசம் எமக்குக் கிடைத்த விலைமதிப்பற்ற மாபெரும் கொடை என்பதையும் மேலும் உயிர்ப்புக் கொண்டாட்டம் இவ்விசுவாசத்திற்காக கடவுளுக்கு நன்றி கூறும் உன்னத நிகழ்வு என்பதையும், நாம் மனதிற் கொள்வோமாக. கடவுள் தம் ஒரே பேறான மகன் மீதான விசுவாசத்தை எமக்கு தந்ததையிட்டு மகிழவேண்டும். அதேபோல இவ்விசுவாசத்தை எமக்கு கையளிப்பதில் பாடுபட்ட அனைவருக்கும் நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளோம். உயிர்ப்பின் மகிழ்ச்சிக் காலத்தில் உயிர்த்த மீட்பரான கிறிஸ்துவைப் பற்றிய அறிவை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவோம். மேலும் அவர் எம்மத்தியில் இருக்கின்றார் என்ற உள் உணர்வையும் புதுப்பித்துக் கொள்வோம்.

எமது வாழ்க்கைப் போராட்டத்தின் போது அவர் எம்மோடு இருக்கின்றார், பயணிக்கின்றார் என்ற நம்பிக்கை எமக்கு வலுவூட்டி நிற்பதை நாம் காண்கின்றோம். மேலும் இந்த உயிர்ப்பின் விழா ஆண்டவர் இயேசு தம் மந்தையைக் கைவிடுவதில்லை என்ற நம்பிக்கையின் விழாவாகவும் இருக்கின்றது. இம்மகிழ்ச்சியின் காலம் அவர் எமது வாழ்க்கையில் என்றும் எம்மோடு இருக்கின்றார் என்பதை புரிந்துகொள்ளத் தூண்டுகின்றது. உயிர்த்த ஆண்டவர் தமது சீடர்களுக்கு தோன்றியபொழுது சமாதானத்தைக் கொடையாக வழங்கினார். எமது தாய் நாட்டின் மக்கள் உண்மையான விசுவாசம் உள்ளவர்களாக வாழ வேண்டும். அதனால் உண்மையான அமைதி கடவுளோடு நாம் இணைந்து இருப்பதால் ஏற்படும் அமைதியாகும்.

போரால் சீர்குலைக்கப்பட்டு பல வடுக்களுக்கு மத்தியில் திகழும் எமது நாட்டிற்கும் தேவைப்படுவது இப்படிப்பட்ட அமைதியே ஆகும். நாம் எமது நாட்டில் அபிவிருத்தியின் சில வளர்ச்சியைக் கண்டாலும் ஒற்றுமை மற்றும் ஒப்புரவுக்கான ஆக்கபூர்வமான வழிகளில் எம் தாய் நாட்டில் அனைவரும் ஈடுபடவேண்டும். அனைவரும் ஒருவர் ஒருவரது மாண்பைக் பாதுகாத்து நடப்பதன் மூலமே இதைப் பெறமுடியும். மேலும் இது நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது. இதற்காக நாம் பல பரித்தியாகங்களையும் செய்ய வேண்டும். உண்மையான அமைதியை நாம் ஏற்படுத்த தேவையான சக்தியைக் கேட்டு செபிப்பதோடு இத்தீர்மானத்தில் நிலைத்து நின்று மாண்புடன் கூடிய அமைதியை ஏற்படுத்தி எம்மாலான அனைத்து செயற்பாடுகளையும் செய்ய தலைப்படுவோம். அமைதியின் கொடைக்காக மகிழ்ந்து கடவுளுக்கு நன்றி கூறும் அதேவேளை அடிப்படை வசதிகள் இன்றி தவிக்கும் மக்களையும் மனதிற் கொள்வோம். தேவையில் உழல்வோரில் இயேசுவின் முகத்தைக் காண எமது கிறிஸ்தவ சீடத்துவம் எம்மை அழைப்பதை நாம் மறந்துவிடலாகாது. உயிர்ப்பின் மகிழ்ச்சி இந்த கிறிஸ்தவ சீடத்துவத்தின் எதிர்பார்ப்பை மென்மேலும் புரிந்துகொள்ள எம்மைத் தூண்டிவிட வேண்டும். எமது நாட்டிலும் எமது தனிப்பட்ட வாழ்விலும் உண்மையான சமாதானத்தை உய்த்துணர எம் எல்லோருக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதாக.

**எமது விசுவாசிகள் மற்றும் நல்மனம் கொண்ட அனைவருக்கும், உயிர்த்த மீட்பரின் மகிழ்ச்சியும், சமாதான[illegible]**

✝ அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை – தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம்

✝ மேதகு வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை
பொதுச்செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம்

**உங்களுக்கு அமைதி உரித்தாகுக. (யோவான் 20:21)**